## 1.1 அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 <u>நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்</u>**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.5.1 <u>நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு</u>

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடியதான சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 <u>இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை</u>

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் | | |
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தி மற்றும் அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கை 4.8 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்படுகாலம் மற்றும் எஞ்சிய பெறுமதி வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் வேறுபாடொன்று | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்ய வேண்டும். |

இருந்தால் அவ்வேறுபாடு இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 795,410,652 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணம் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் படிகள் செய்ய முடியாத போதிலும், அதிகாரசபையின் முகாமையாளர் பதவி வகிக்கும் 27 உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பேரில் 2018 மே மாதம் முதல் செயற்படும் வகையில் ரூபா 50,000 வீதம் முகாமைத்துவ படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்நிறுவனத்தின் சிரேஷ்ட சிவில் விமான சேவை பரிசோதகர் களினதும் முகாமையாளர்களினதும் கடமை தன்மையின் பிரகாரம் அவர்களின் சேவை கடமை நேரத்திற்கு பின்னரும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அவர்களுக்கு தமக்கென்று வாகனமொன்றில் கடமைக்கு செல்வதற்கும் வருவதற்கும் முடியுமான வகையில் இப்படிகளை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.<br><br>இப்படிகளை அடிப்படையாகக் கொண்டு தமது வாகனத்தை பயன்படுத்துவதற்கு தொடர்பில் ரூபா 30,000 தொகை போக்குவரத்து படிகளாகவும் அப்பதவியணிக்காக வழங்கப்படும் ரூபா 20,000 ஆன படியொன்று என இரண்டினதும் கூட்டுத்தொகையாகும். | உத்தியோகத்தர்களுக்கு படிகள் கொடுப்பனவு செய்யும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவுகளுக்குரிய அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் அடிப்படையிலானன உள்ளீட்டு வரியின் பெறுமதி ரூபா 152,208,634 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியதாக காணப்பட்ட தொகையை அறவிடுவது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப் பட்ட போதும் அப்பணத்தை அறவிடுவது தொடர்பாக இறுதி தீர்மானமொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்து டன் தொடர்ந்தும் கலந்துரை யாடப்பட்ட போதும் இதுவரை இறுதி தீர்மானமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணம் தொடர்பாக குறித்த தரப்பினருடன் கலந்துரையாடி இறுதி இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும். |

**1.7 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.</u>**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ''நிகழ்ச்சி நிரல்'' 2030 இன் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைய வேண்டிய முறை, இலக்குகளை மதிப்பிடுவதற்கு குறிகாட்டிகள் இனங்காணல் இடம் பெற்றிருக்கவில்லை. | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். இதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றுவதறகு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 2. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,300,143,061 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,042,914,458 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 257,228,603 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வெளிநாட்டு விற்பனை மிகை அறவீடு அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 366,789,848 ஆல் அதாவது 18.4 ஆல் அதிகரித்து இருந்தது.

ii. மீளாய்வாண்டின் பதவியணியினர் கிரயம் ரூபா 312 மில்லியனாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 288 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஊழியர் பதவியணியினர் கிரயத்தின் அதிகரிப்பு 8 சவீதமாக இருந்ததுடன், ஏனைய படிகள் ரூபா 25 மில்லியனால் அதிகரித்தமை இதற்கான காரணங்களாக இருந்தன.

iii. மீளாய்வாண்டில் நிர்வாக மற்றும் ஏனைய செலவினம் ரூபா 171 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் ரூபா 149 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாக மற்றும் ஏனைய செலவினம் அதிகரிப்பு 15 சதவீதமான இருந்ததுடன் வெளிவாரி தொழில்நுட்ப ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்காக கொடுப்பனவு ரூபா 14 மில்லியனால் அதிகரித்தமை இதற்கான காரணமாக இருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

i. 2017 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் 2:2:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அது 2:1 ஆக குறைவடைந்திருந்தது.

ii. சொத்துக்கள், உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்களின் அசைவினை கருத்திற் கொள்ளும் போது 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது மொத்த சொத்துக்கள் ரூபா 768,027,904 ஆலும் அதாவது 16 சதவீதத்தினாலும் உரிமை மூலதனம் ரூபா 445,904,311 ஆல் அதாவது 14.22 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் மொத்த பொறுப்புக்களும் ரூபா 322,123,592 அதாவது 19.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் அனைத்து செயற்பாடுகளையும் மேவுகை செய்யப்படும் வகையில் 18 செயற்பணிகள் இனங்கண்டு அதற்கு நேரொத்த பிரதான செயலாற்றுகை சுட்டிகள் (Key performance Indicators) அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதற்கு இணங்கக் கூடிய விதமாக செயலாற்றுகையை அறிக்கை தயாரித்திருக்கவில்லை | உங்களது அவதானிப்பின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையை தயாரிக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிரதான செயலாற்றல் குறிகாட்டியின் பிரகாரம் செயலாற்றலை அளவிடுவதற்காகவும் வேறுபாடுகளுக்கான காரணங்களை மீளாய்வு செய்து தேவையான மாற்று நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஆ) சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் கணக்காய்வினால் அதிகாரசபை கவனம் செலுத்த வேண்டிய 70 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்த துடன் அவ்விடயங்கள் தொடர்பாக சீராக்கும் திட்டமொன்று (Corrective Action Plan) தயாரிக்கப்பட்டு இணங்கிய காலப்பகுதிக்குள் மேற்படி அமைப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இக்கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த Air Navigation Services பிரிவிற்குரிய 36 விடயங்களில் 8 விடயங்கள் தொடர்பாக சீராக்கும் திட்டம் (Corrective Action Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். இச்சீராக்கும் திட்டத்தை தயாரிப்பதற்கு ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் கூட்டிணைப்பு அவசியமாகும். எஞ்சிய 28 விடயங்களை திருத்தும் செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டம் குறித்த நிறுவனங்களுடன் கூட்டிணைக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காலரீதியாக சீராக்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முறைப்படி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கட்டுநாயக்க புதிய அலுவலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலக செயற்பாட்டு நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்ற போதும் கட்டிடத்தின் நிர்மாண மதியுரைக்காக விடுவிக்கப்பட்டிருந்த (Civil Aviation Inspector (Aerodromes Standards) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை செயற்திட்ட முகாமைத்துவ பதவிகளில் செயற்படுவதாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக (Civil Aviation Inspector (Aerodromes Standards) பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. | இந்த அதிகார சபையின் புதிய அலுவலகக் கட்டிடத்தை அமைக்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும், குறைபாடுகள் பூர்த்தி செய்வதற்கு உள்ளதாவும் உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக திரு. கெலும் விஜேவர்த்தன அவர்களின் சேவை, செயற்திட்ட முகாமையாளர் பதவிக்காக தேவையாக இருந்தமையால் சிவில் விமான சேவைகள் பரிசோதகர் (உலங்கு வானூர்தி தரம்) பதவியிலிருந்து பூரண காலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். | கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்து 1 ½ ஆண்டுகள் எடுத்திருந்த போதிலும், மேலும் முழு நேர உத்தியோகத்தரொருவரின் தேவைப்பாடு என்பது சிக்கலான தொன்றாகும். இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் தொழில்நுட்ப பிரிவின் Aircraft registration and airworthiness பிரிவின் பணிப்பாளர் பதவி 2018 யூலை மாதம் முதல் வெற்றிடமாக (Vacant) காணப்பட்டது. | இந்த அதிகாரசபையின் விமானங்களை பதிவு செய்தல் மற்றும் விமான தகைமை பிரிவின் பணிப்பாளர் பதவி வெற்றிடமானது 2018.09.04 ஆந் திகதியில் இருந்து வருகின்றது இப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2018.09.02 மற்றும் 2018.09.03 ஆந் திகதிகளில் தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டதுடன் இந்த அதிகாரசபையின் இணைத்தளத்திலும் வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தகைமையுடைய 05 விண்ணப்பதாரிகள் நேர்முக பரீட்சைக்காக அழைக்கப்பட்டதுடன் மேற்படி பதவிக்காக தகைமையுடையவர் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தமையால் இந்த உத்தியோகத்தரின் சுய விபரக் கோவை விபரங்களை கருத்தில் கொள்வதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு 2018.11.05 ஆந் திகதி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | பதவி வெற்றிடத்தை நிரப்புவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |